இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கி 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1930 இன் 10 ஆம் இலக்க இறப்பர் ஆராய்ச்சி கட்டளைச்சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட

கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு முரணாக வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,315,000 காசுப் பாய்ச்சல் பெறுவனவுகளாக செம்மையாக்கப்பட்டிருக்காததுடன் மோட்டார் வாகனத்தை அகற்றும் இலாபமான ரூபா 2,315,000 காசுப் பாய்ச்சல் கூற்றில் பற்றாக்குறையிலிருந்து கொள்ளப்பட்டதனால் செயற்பாட்டு	2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்தின் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வின் போது	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வண்டும்.

	நடவடிக்கைகளின் பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	அப்பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனவே 2024 ஆம் ஆண்டில் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற பணத்தை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	
(ஆ)	இ.பொ.து.க நியமம் இலக்கம் 07 இன் 92(அ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த கொள்ளளவு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட மற்றும் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற ரூபா 12,695,630 சூரிய மின்கலன்களின் மொத்த கொள்ளளவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இ.பொ.து.க நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் மொத்த கொள்ளளவுப் பெறுமதியை (Gross Carrying Amount) நிறுவனத்தின் சொத்துக்களை மீள்மதிப்பு செய்யும் வரை கணக்கறிக்கைகளில் காட்டுவதற்கு 2025 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீடு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 ஏப்ரல் 26 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,616,950 தொகையான மிகவும் தூய்மையான நீர் சுத்திரிப்பு முறைமை (Ultrapure Water Purification System) ஆய்வுகூட செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தனால் சபையின் பற்றாக்குறை அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நடைமுறையற்ற சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வேண்டிக் கொண்ட சந்தர்ப்பங்களின் போது உரிய ஆராய்ச்சிப் பிரிவினால் அது ஒரு பராமரிப்பு செயற்பாடு என அறிக்கையிடப்பட்டிருந்ததனால் உரிய செலவுகள் ஆய்வுகூட செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் இது	சொத்துக்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

		தொடர்பாக விசாரித்த போது அது காணப்படுகின்ற உபகரணத்திற்கு தேவையான இன்னுமொரு உபகரணம் என அறிக்கையிடப்பட்டது. எனவே இந்த கணக்கீட்டு தவறினை 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைதுத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை			
(i) XII ஆம் அத்தியாயம்	இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்படாத நடைமுறை கையேட்டின் பிரகாரம் ஒரு ஆண்டிற்காக நிறைவேற்று தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 58 விடுமுறை நாட்களும் ஏனைய தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 53 விடுமுறை நாட்களும் வழங்கப்பட்டிருந்தன.	தாபன விதிக் கோவையின் விடுமுறை தொடர்பான அத்தியாயம் இலக்கம் 12 இன் பிரகாரம் நிறுவனத்தினால் விடுமுறையானது ஒரு ஆண்டிற்கு அமைய விடுமுறை 21 நாட்களும் ஓய்வு விடுமுறை 24 நாட்களுமாக விடுமுறை நாட்கள் 45 வரை 2025-01-01 ஆந் திகதியிலிருந்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவைக்கு இணங்க விடுமுறை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.
(ii) XV ஆம் அத்தியாயத்தின் 4:7 ஆம் பிரிவு	கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடன் விடுமுறை பெற்று வெளிநாடு சென்று பிணை நிபந்தனைகளை	பிணை நிபந்தனைகளை மீறிய பீ.பி வீரரத்ன மற்றும் துருல் வர்ணகுல ஆகிய	தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுககு இணங்க பிணை நிபந்தனைகளை

		மீறிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகளிலிருந்து 34 ஆண்டுகள் வரையான காலத்தில் சபையினால் அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 3,876,552 தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நபர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள ரூபா 2,761,932 பணத்தை அறவீடு செய்வதற்காக எடுக்ககூடிய சட்ட நடவடிக்கை தொடர்பாக சட்ட மா அதிபரிடமிருந்து ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டு உத்தியோகத்தர்கள தற்பொழுது செலுத்த வேண்டியுள்ள மீதியை தவணை ரீதியாக செலுத்துகின்றார்கள்.	மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது பிணைதாரர்களிடமிருந்து உரிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் ரோகவை 751	கிடைக்கின்ற அனைத்து பொருட்களையும் உடனடியாக பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ஆய்வுகூடத்திற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற கண்ணாடி குவளைகள் உள்ளடங்கலாக கண்ணாடியிலான பரிசோதனை உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களுக்காக இருப்பு பதிவேடு மற்றும் பாவனைப் பொருள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	அனைத்து திணைக்களங்களிலும் உத்தியோகத்தர்களுக்கு ஒரு இருப்பு பதிவேட்டினையும் பாவனைப் பொருள் பதிவேட்டினையும் பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இருப்பு பதிவேட்டினையும் பாவனைப் பொருள் பதிவேடுட்டினையும் பராமரித்தல் வேண்டும்.
(இ)	2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	(i) தலைவருக்கு கடமை களை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படி போதியதாக இல்லாத விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் சிபாரிசுடன் உரிய	பணிப்பாளர் சபையினால் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட்டு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் முறையான	வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான எரிபொருள் செலவினை மீளளிப்பு செய்யக்கூடியதாக இருந்த போதிலும் தலைவரினால் நிறுவனத்தின் கட்டளைகளின் மூலம் எரிபொருளினைப பெற்றுக்கொள்வதனால் அது நிறுவனத்தின் செலவுகளுக்கு ஓன்று சேர்க்கப்பட்டிருந்தது.	அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே இதன் பின்னர் நடைபெற்ற 2024-08-21 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்திற்காக தலைவரினால் பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருள் செலவினை மீளளிப்பது சம்பந்தமாக சபைப் பத்திரம் அனுப்பிவைக்கப்படவில்லை.	
		(ii) உரிய சுற்றறிக்கைக்கு இணங்க மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தலைவரினால் மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஈ)	மேற்கூறிய சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி	ஒரு உத்தியோகபூர்வ வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தருக்கு ஏனைய அலுவலக வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கு தகமை இல்லாத போதிலும் தலைவர் ஒதுக்கீடு செய்த வாகனம் மற்றும் எரிபொருள் படியினைப் பெற்றுக் கொண்டிருந்தும் 2024 மே 29 ஆந் திகதி பதில் கடமை பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில் டார்டன்பீல்ட் தலைமை அலுவலகத்தில் இருந்த PD-2787 ஆம் இலக்க டபிள் கெப் வாகனம்	முன்னாள் தலைவரினால் அப்போதிருந்த பதில் கடமை பார்க்கும் பணிப்பாளருக்கு மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல வேண்டுதல்களுக்கு இணங்க 2024 மே 29 ஆந் திகதி பதில் கடமை பார்க்கும் பணிப்பாளரினால் போக்குவரத்து பிரிவிற்கு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க டார்டன் பீல்ட் தலைமை அலுவலகத்தில் இருந்த PD -2787	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		தலைவரின் கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணஙக 2024 மே 29 ஆந் திகதியிலிருந்து 2024 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையான காலத்தில் 40 நாட்களில் 4,566 கிலோ மீற்றர் துாரத்திற்கு இந்த வாகனம் தலைவரின் கடமை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என ஓட்டக் குறிப்பினை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது.	ஆம் இலக்க டபிள் கெப் வாகனம் இறப்பர் ஆராய்ச்சி சபையின் தலைவரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.	
(உ)	2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க நிறுவன நல்லாட்சி தொடர்பான சுற்றிக்கையின் 03 ஆம் அத்தியாயம்	இறப்பர் ஆராய்ச்சி சபை முறைப்படியாக மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்திருக்கவில்லை.	இறப்பர் ஆராய்ச்சி சபைக்கு முறைப்படியாக மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்காக நிறுவனத்தில் ஒரு உள்ளகக் குழுவினை பதில் கடமை பார்க்கும் பிரதி பணிப்பாளரின் (நிருவாகம்) தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் துரிதமாக மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மனிதவளங்கள் திட்டத்தினை தயாரித்தல் வேண்டும்.
(ஊ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலகக நிறுவன நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 6.7 ஆம் பந்தி	அனைத்து சொத்துக்களுக்குமாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபை 2024 திசெம்பர 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின்	2024 ஆம் ஆண்டில் வாகனங்கள் உள்ளடங்கலாக சொத்துக்களின் மீளாய்வு நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்படுவதுடன் மீளாய்வு நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டத	வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வாகனங்களுக்காக அவ்வாறான மீளாய்வினை மேற்கொண்டிருக்கவில்லை.	ன் பின்னர் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 120,923,726 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 70,609,994 ஆகும். முன்னைய ஆண்டுடன ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 50,313,732 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்க மானியம் ரூபா 68,158,012 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 9,561,230 ஆலும் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

விடயம்	மீளாய்வாண்டு	முன்னைய ஆண்டு	மன்னைய ஆண்டுடனான மாற்றம்	மாற்றத்தின் சதவீதம்
	ரூபா	ரூபா	ரூபா	சதவீதம்
அரசாங்க மானியம்	444,209,443	512,367,455	(68,158,012)	(13)
ஏனைய வருமானம்	37,972,808	47,534,038	(9,561,230)	(20)
பிற்போட்ட வருமானம்	-	-	-	-
தோட்ட வருமானம்	119,937,401	117,584,111	2,353,290	2
சம்பளம், கூலி, ஊழியர் பிரதிபலன்	373,984,958	354,446,535	19,538,423	6
வழங்கல்கள் மற்றும் பயன்பாட்டு செலவுகள்	38,963,837	41,862,017	(2,898,180)	(7)
பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவு செலவுகள்	127,053,972	163,536,107	(36,482,135)	(22)
ஏனைய செலவுகள்	120,945,903	131,018,063	(10,072,160)	(8)

2.3 விகிதாசார பகுப்பாயவு

மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 2.9:1 மற்றும் 2.3:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அப்பெறுமதி முறையே 5:1 மற்றும் 4:1 ஆகும். நடைமுறைச சொத்துக்கள் ரூபா 40,312,827 ஆல் குறைவடைதல் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 8,688,235 ஆல் அதிகரித்தல் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் வீழ்ச்சியவைதற்கு காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ரூபா 130,000 பெறுமதியான 45-8703 ஆம் இலக்க ட்ரேலர் பவுஸர் 2024 செப்தெம்பர் 25 ஆந் திகதியில் உள்ளவாறு வாகன விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது திருத்தம் செய்யும் நிலையில் காணப்பட்டது எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும் இந்த ட்ரேலர் பவுஸர் தோட்ட பிரிவின் மூலம் உடைந்த இரும்பாகப விற்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திகதியான 2024 நவம்பர் 04 ஆந் திகதி வரை இது சம்பந்தமாக எந்த பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 104(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இதற்காக கணக்காய்வாளரினால் 2025-03-28 ஆந் திகதி புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த புலனாய்வு அறிக்கை 2025-05-05 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் புலனாய்வு அறிக்கையை கவனித்துப் பார்க்கும் போது இடம்பெற்றுள்ள ஒட்டுமொத்த நடைமுறையினுள் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யார் என்பது சம்பந்தமாக நேரடி சிபாரிசு வழங்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க இது சம்பந்தமாக முறையான விசாரணை அறிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதனால் 2025-06-23 ஆந் திகதி மெமோ பத்திரத்தின் மூலம் சிரேஷ்ட கணக்காளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவரை உரிய அறிக்கை வழங்கப்படவில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	இறப்பர் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் எதிர்பார்ப்பில் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு கலந்துரையாடலுக்கு இணங்க அரசாங்க தனியார் கூட்டு முயற்சியினூடாக ஒரு வணிக மாதிரியாக இறப்பர உற்பத்தியை திட்டமிடல் மற்றும் செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்காக துகள்களை வரையறுக்கும் சேவை நிலையத்தை (FEAS CENTER) தோற்றுவிப்பதற்காக ரூபா 49.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டின் போது அந்த நிலையத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2023 ஒக்தோபர் மாதத்திலிருந்து அதாவது இரண்டு ஆண்டுகளுக்கு அண்மித்த காலத்திலிருந்து நிலைத்தின் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததனால் உரிய கட்டிடம் மற்றும் ரூபா 38,918,694 கிரயமான கணனியும் மென்பொருட்களும் இயந்திரங்கள், தளபாடம், அலுவலக உபகரணங்கள் அனைத்தும் விளைவற்றுக் காணப்பட்டன.	துகள்களை வரையறுக்கும் சேவை நிலையத்தில் பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவனத்துடன் இணைந்து ஒரு உடன்படிக்கையின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018-08-23 ஆந் திகதியிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவன உடன்படிக்கை முடிவடைந்ததுடன் நீங்கிக் கொண்டுள்ளது. எனவே இத்தகவல்கள பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டு நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் செயற்படுத்துவதற்காக விருப்புக்களை வெளிப்படுதலினை கோருவதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு இணைந்ததாக இந்த நிலையத்தில் காணப்படுகின்ற உபகரணங்கள் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இத்தகவல்களுக்கு இணங்க விருப்புக்களை வெளிப்படுத்தலினை கோரி பொருத்தமான தரப்பினர்களுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தின் செயற்பாடுகள் முறையான ஆய்வோடு முறைப்படியாக திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறே பயன்படுத்தப்படாத சொத்துக்கள் வினைத்றனான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ)	இறப்பர் ஆராய்ச்சி சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளின் விபரமான தகவல்களை உள்ளடக்கிய பிரதான ஆராய்ச்சி பதிவேட்டினை பராமரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவிலலை.	அனைத்து ஆராய்ச்சிகளினதும் விபரமான தகவல்களை உள்ளடக்கிய பிரதான ஆராய்ச்சி பதிவேட்டிற்கான மாதிரியானது ஆராய்ச்சி மீளாய்வு தொடர்பான உபகுழுவின் மூலம் பெற்றுக்கொள்ளவதற்கும் 2025 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே இதனுடன் இணைந்ததாக கடந்த ஆராய்ச்சி அறிக்கைகளின் விபரமான தகவல்களை இப்பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.	இறப்பர் ஆராய்ச்சி சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான ஆராய்ச்சிகளை உள்ளடக்கிய ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.
(இ)	2022 ஆம் ஆண்டில் குருவிட்ட தோட்டத்தில் மஞ்சல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக மூலப்பொருள் கிரயம் மற்றும் வேலையாள் கிரயத்திற்காக ரூபா 1,659,131 செலவு செய்து ரூபா 209,840 வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மஞ்சல் விளைச்சல் உரிய நியம தரம் இன்றி மஞ்சலினை தூள்களாக மாற்றியதன் காரணமாக மஞ்சல் தூள்களின் நிறம் மாற்றமடைந்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை மஞ்சள் தூள் காலாவதியாவதற்கு அண்மித்த நிலையில் காணப்பட்டதன் அடிப்படையில் 205 கிலோ கிராம் மஞ்சல் தூளினை விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது.	வெள்ளை வேர் நோயினால் பாதிகப்பட்டுள்ள நிலத்தில் மீண்டும் இறப்பர் பயிர்ச் செய்கைக்காக அந்த நிலத்தின் நோய்க் கிருமிகளை அகற்றும் வரை ஏனைய தற்காலிக பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க குருவிட்ட தோட்டத்திலும் மஞ்சல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதானது இலாபம் உழைக்கும் நோக்கமின்றி இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமாக நிலத்தை தயார்படுத்தும் வரை உப பயிர்ச் செய்கையாகவாகும். தற்பொழுது இருப்பில் காணப்படுகின்ற 205 கிலோ கிராம் மஞ்சலினை இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினைச் செய்து வெற்றிகரமாக நிகழ்ச்த்திட்டத்தினை முடிவு செய்யக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ)	இறப்பர் ஆராய்ச்சி சபையின் களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் அமைந்துள்ள 38 காணிகள் தொடர்பான திட்ட வரைபட இலக்கம் / உறுதி இலக்கம் இன்றுவரை தேடிக்கண்டுபிடிக்க முடியாதுள்ளதுடன் 15 காணிகள் தொடர்பாக உரிமையாண்மையினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் இறப்பர் ஆராய்ச்சி சபையிடம் இல்லை.	1994-06-27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இறப்பர் ஆராய்ச்சி சபையின் கீழ் காணப்படுகின்ற ஆலோசனை சேவை திணைக்களம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்றிணைப்புடன் காணிகளையும் கட்டிடங்களையும் இரண்டு நிறுவனங்களும் பயன்படுத்துவதுடன் இதில் காணிகளை பொறுப்பேற்பது சம்பந்தமான நடைமுறை முறைப்படியாக இம்பெற்றிருக்கவில்லை. எனவே இரண்டு நிறுவனங்களும் இணைந்து 2024-12-19 ஆந் திகதி கலந்துரையாடி விபரமான ஒரு அறிக்கையை வழங்குமாறு தெரிவித்து 2025-04-10 ஆந் திகதி இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இத்தகவல்களின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை ஒப்படைக்கும் நடவடிக்கையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணிகளின் உரிமைய பொற்றுப்பேறறல் அல்லது ஒப்படைத்தல் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டியதுடன் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	இறப்பர் ஆராய்ச்சி சபையின் 43 இற்கு மேற்பட்ட அளவிலான காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி திணைக்களம் பயன்படுத்தி வருவதுடன் இக்காணிகளை குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்குதல் அல்லது ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இறப்பர் ஆராய்ச்சி சபையினால் பயன்படுத்தி வருகின்ற மொனராகலை குமாரவத்த மற்றும் அளவ்வ நாரம்பொலவத்த ஆகிய தோட்டங்களை சபையினால் பொறுப்பேற்பதற்கு	-மேற்படி-	சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை தீர்த்துவைத்தல் வேண்டும்.

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்து 2022 ஆம் ஆண்டின் போது முடிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கான உயிரியல் எரிபொருள் மர வகைகள் அறிமுகப்படுத்தும் முன்னோடி செயற்திட்டத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாமையின் காரணமாக அதற்காக கிடைத்த ரூபா 10,457,200 பணத்தில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,283,644 அதாவது 40 சதவீதமான பணம் மிகுதியாக இருந்தது.	ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கிடைத்த பணத்தில் ரூபா 4,283,644 மிகுதியாக இருந்தது. அப்பணத்தையும் பயன்படுத்தி உடன்படிக்கையின பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் உரிய தகவல்களைப் பரீட்சித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காததனால் செலுத்த வேண்டிய இறப்பர் விவசாயிகளின் மற்றும் நிறுவன உத்தியோகத் தர்களின் பணத்தை அடையாளம் காண்பதற்காக 2025-05-06 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கிடைக்கின்ற சிபாரிசுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) டயர் நிலையத்தில் 2020 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரூபா 20,034,200 பெறுமதியான கேஸ் குரோமாட்ரோகிரபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Gas Chromatography- Mass Spectrometry) (GC-MS	இந்த இரண்டு உபகரணங்களையும் கொள்வனவு செய்ததன் குறிக்கோளானது இறப்பர் மற்றும் இறப்பர் பொருட்களிலுள்ள சேர்மானத்தை (பாரமான இரும்பு உலோகங்கள் மற்றும் பலநீரக அணு கலவை	கொள்வனவு செய்த உபகரணங்களை திட்டமிட்டவாறு உச்ச அளவு வினைத்திறனுடன் பயன்படுத்துதல் வேண்டும்.

	உபகரணம் மற்றும் ரூபா 15,950,000 பெறுமதியான ICP-OES உபகரணம் கடந்த ஆண்டின் போது 111 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் பரீட்சிப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த 02 உபகரணங்களையும் கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்த்தவாறு சபைக்கு வருமானத்தை தோற்றுவிப்பதற்கு முடியாதிருந்தது.	முதலியவை) தொடர்பாக பரீட்சித்தல், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு தேவைப்படுகின்ற உயரந்த தரத்தைக்கொண்ட இறப்பர் பொருட்களை உற்பத்தி செய்யும் போது தேவைப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் சேவை வழங்குதல்களாகும். இச்சேவைகளை வழங்கும் போது அதற்காக செலவு செய்யப்படுகின்ற ஆகக்குறைந்த கட்டணத்தை அறவீடு செய்வதன் மூலம் இலங்கை கைத்தொழிலாளர்களுக்கு இச்சேவைகளை வழங்குவதன் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற அதிக செலவினை தள்ளிப் போடுவதனை தவிர்த்தலும் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்தலின் குறிக்ககோளாகும். அதனால் கொள்வனவு செய்தலின் நோக்கமானது வருமானம் உழைப்பது மாத்திரமன்றி ஆராய்ச்சி நடவடிக்கைகளும் சேவை வழங்குதலும் நோக்கமாகும்.	
(ஆ)	2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4,052,300 தெகைகைக்கு கொள்வனவு செய்த மூனி விஸ்கோ மீற்றர் (Mooney Viscometer) இயந்திரத்தின் மென்பொருளிலுள்ள குறைபாட்டின் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதி வரை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிறுவன வளவில் விளைவற்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	வழங்குனருக்கு தொடர்ச்சியாக இதனை சரிசெய்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் பதில் கிடைக்காததனால் ஏனைய நிறுவனத்தில் அறிவைக்கொண்டுள்ள ஒரு உத்தியோகத்தரின் மூலம் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	திருத்தங்களை முறைப்படியாக செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நிறுவனத்தில் முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் ஆய்வுகூட உதவியாளர் கடமைகளுக்காக நாளாந்த சம்பளம் பெறுகின்ற 01 ஆண்டிலிருந்து 23 ஆண்டுகள் வரையான சேவைக் காலத்தினைக் கொண்ட 32 உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	தோட்ட திணைக்களத்தின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் செக்ரோல் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் தோட்ட திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் தேவைப்படும் போது மாத்திரம் தோட்ட திணைக்களத்தின் சேவையிலிருந்து நாளாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் நிறுவனத்திற்கு ஈடுபடுத்தப்படுவார்கள்.	முகாமைத:துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் சேர்த்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட WP/CAO/3470 மற்றும் WP/NC/5811 ஆம் இலக்க வாகனங்களின் பதிவுசெய்தல் சான்றிதழ்கள் தலைவர், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமாக காட்டப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.	தற்பொழுது இந்த இரண்டு வாகன்ஙகளின் உரிமை தலைவரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனினும் இதன் உரிமை நிறுவன தலைவரான பணிப்பாளரிடம் இருக்க வேண்டியதுடன் பணிப்பாளர் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Director, Rubber Research Institute of Sri Lanka, Dartonfield, Agalawatta) பெயரில் பதிவினை மாற்றம் செய்தல் வேண்டும். எனவே இதன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2025-07-25 ஆந் திகதி நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வாகனங்களின் பதிவுசெய்தல் சான்றிதழ் சபையின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கின் செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கை இன்று வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைபு 2025-03-24 ஆந் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்தப்பட்டதானது MPI/R/03/RRI–Annual Report 01 ஆம் இலக்க 2025-06-20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட 2024 ஆண்டறிக்கை 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுறறகிக்கைக்கு இணங்க தயாரித்து அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறாகும். 2024 ஆண்டறிக்கை வரைபின் மென்பிரதி தேவையான நடவடிக்கைகளுக்காக 2025-09-18 ஆந் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன்.	அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டவாறு ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

4.2 கூட்டிணைந்த திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2024 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2025 - 2028 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவை கையேட்டிலுள்ள பிரிவுகளின் பிரகாரம் தொடர்ச்சியாக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4.3 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 அந் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைின் வாழிகாட்டிக் கோவை கையேட்டின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு தடவையாக ஆண்டின் போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சேர்மானம் அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டதனால் இரண்டாம் காலாண்டில் நடாத்த முடியாதிருந்தது. மூன்றாம் காலாண்டிற்கு பணிப்பாளர் சபை நியமிக்கப்படாததன் அடிப்படையில் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.	அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவை கையேட்டின் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டவாறு கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும்.